சுருக்கம்

வேளாண்மை-உழவர் நலத் துறை - 2024 – 2025-ஆம் ஆண்டு வேளாண்மை நிதிநிலை அறிக்கை - தரமான வேளாண் விளைபொருட்கள், மதிப்புக் கூட்டப்பட்ட பொருட்கள் எளிதில் நகர்ப்புர நுகர்வோரைச் சென்றடையும் வகையில் 100 உழவர் அங்காடிகள் அமைத்தல்- முதற்கட்டமாக 25 உழவர் அங்காடிகள் அமைத்தல் - ஆணை – வெளியிடப்படுகிறது.

---

வேளாண்மை-உழவர் நலத் (வேவி3) துறை

அரசாணை (நிலை) எண். 147

நாள்: 27.05.2025
திருவள்ளுவர் ஆண்டு 2056
ஸ்ரீ விசுவாவசு வருடம்
வைகாசி திங்கள் 13 -ஆம் நாள்

படிக்கவும்:

தலைமைச் செயல் அலுவலர், தமிழ்நாடு மாநில வேளாண்மை விற்பனை வாரியம், கடிதம் எண். பி1/870/2025, நாள் 03.03.2025.

ஆணை:

மாண்புமிகு வேளாண்மை-உழவர் நலத்துறை அமைச்சர் அவர்கள், 2024-2025 ஆம் ஆண்டு வேளாண்மை நிதிநிலை அறிக்கையில் கீழ்க்கண்ட அறிவிப்பை (எண்.1(xxii)) வெளியிட்டுள்ளார்கள்:-

முதலமைச்சரின் மண்ணுயிர் காத்து மன்னுயிர் காப்போம் திட்டம் (CM MK MKS)

உழவர்சந்தைகளில் விற்பனை செய்வதைப் போன்று தரமான வேளாண் விளைபொருட்கள், மதிப்புக் கூட்டப்பட்ட பொருட்கள் எளிதில் நகர்ப்புர நுகர்வோரைச் சென்றடைய, நிர்ணயிக்கப்பட்ட தர அளவுகளின்படி விவசாயிகளிடமிருந்து நேரடியாகக் கொள்முதல் செய்து, தரம்பிரித்து, சிப்பம்கட்டி, முத்திரையிட்டு விற்பனை செய்ய ஏதுவாக 100 உழவர் அங்காடிகள், 5 கோடி ரூபாய் மாநில நிதியில் செயல்படுத்தப்படும்.

(த.பி.பா)

2. மேற்காண் அறிவிப்பினைத் தொடர்ந்து, 21.10.2024 அன்று நடைபெற்ற ஆய்வுக்கூட்டத்தின் அடிப்படையில், தலைமைச் செயல் அலுவலர், தமிழ்நாடு மாநில வேளாண்மை விற்பனை வாரியம் அவர்கள், மேலே படிக்கப்பட்ட கடிதத்தில், 25 உழவர் அங்காடிகள் (5 நடமாடும் உழவர் அங்காடிகள் உட்பட) தமிழ்நாடு மாநில வேளாண்மை விற்பனை வாரியம், தோட்டக்கலை மற்றும் மலைப்பயிர்கள் துறை மூலமாக ரூ.554.887 இலட்சம் மதிப்பில் மாநில நிதியில் செயல்படுத்திடும் பொருட்டு திருந்திய கருத்துருவினை அனுப்பியுள்ளார்.

3. தலைமைச் செயல் அலுவலர், தமிழ்நாடு மாநில வேளாண்மை விற்பனை வாரியம் அவர்கள், விவசாயிகளின் வருமானத்தை அதிகரிக்கும் அடிப்படை நோக்கத்துடன் விவசாயிகள் தங்கள் விளைபொருட்களை மதிப்புக்கூட்டி விற்க தமிழ்நாடு வேளாண்மை விற்பனை மற்றும் வேளாண் வணிகத்துறை மூலம் ஊக்குவிக்கப்படுகின்றனர் என்றும், கடின உழைப்புக்கு நல்ல பலன் கிடைக்க வேண்டும் மற்றும் விளைபொருட்களுக்கு சரியான விலை கிடைக்க வேண்டும் என்பதே ஒவ்வொரு விவசாயியின் கனவாக உள்ளதால், இந்தக் கனவை நனவாக்க, உழவருக்கு தனியாகவோ அல்லது குழுவாகவோ வேளாண்மை விற்பனை மற்றும் வேளாண் வணிகத்துறை, பயிற்சி மற்றும் நிதியுதவி அளித்து உறுதுணையாக உள்ளது என்றும், உழவர்கள் இந்த வாய்ப்பைப் பயன்படுத்தி தங்கள் விளைபொருட்கள் மற்றும் மதிப்புக் கூட்டப்பட்ட பொருட்களை நேரடியாக சந்தைப்படுத்த ஊக்குவிக்கப்படுகின்றனர் என்றும் தெரிவித்துள்ளார்.

4. தலைமைச் செயல் அலுவலர், தமிழ்நாடு மாநில வேளாண்மை விற்பனை வாரியம் அவர்கள், இத்திட்டத்தின் நோக்கம், திட்டச் செயலாக்கத்தை பின்வருமாறு தெரிவித்துள்ளார்:

**நோக்கங்கள்:**

- விவசாயிகள் தங்கள் விளைபொருட்களுக்கு நியாயமான விலை கிடைத்தல்
- நுகர்வோர் நியாயமான விலையில் தரமான பொருட்களைப் பெறுவதை உறுதி செய்தல்
- இடைத்தரகர்களின் குறுக்கீட்டைக் குறைத்தல்,
- விவசாய உற்பத்திப் பொருட்களின் மதிப்புக் கூட்டல் மூலம் விவசாயிகள், வேளாண் தொழில் முனைவோர்கள் மற்றும் ஆர்வமுள்ள இளைஞர்களுக்கு வேலை வாய்ப்பினை உருவாக்குதல்.

**திட்டச் செயலாக்கம்:**

தமிழ்நாடு மாநில வேளாண்மை விற்பனை வாரியம் மற்றும் தோட்டக்கலை மற்றும் மலைப்பயிர்கள் துறை மூலம் சென்னை மற்றும் அதன் புறநகர்ப் பகுதிகளில் விவசாயப் பொருட்களுக்கான சந்தை வாய்ப்புகளை எளிதாக்குவதை மையமாகக் கொண்டு உழவர் அங்காடிகள் அமைக்கப்படுகின்றன. விவசாயிகள் / வேளாண் தொழில்முனைவோர் / விவசாயத்தில் ஈடுபட்டுள்ள இளைஞர்கள் / வேளாண் பட்டதாரிகள் / உழவர் உற்பத்தியாளர் நிறுவனங்கள் வேளாண் பொருட்களைக் கொள்முதல் செய்து நுகர்வோருக்கு நியாயமான விலையில் விற்பனை செய்திடும் பொருட்டு உழவர் அங்காடிகள் குத்தகைக்கு விடப்படும். குத்தகைக்காரர்கள், விவசாயிகள் / வேளாண் தொழில்முனைவோர் / உழவர் உற்பத்தியாளர் நிறுவனங்கள் உள்ளிட்ட வேளாண் உற்பத்தியாளர்களிடமிருந்து, நேரடியாக வேளாண் பொருட்களைக் கொள்முதல் செய்து விற்பனை செய்ய வேண்டும்.

5. தலைமைச் செயல் அலுவலர், தமிழ்நாடு மாநில வேளாண்மை விற்பனை வாரியம் அவர்கள், உழவர் அங்காடியின் வடிவமைப்பு, இலட்சினை(logo), முத்திரை மற்றும் பெயர் (Brand Name) ஆகியவை இறுதி செய்யப்பட்டுள்ளன என்றும், உழவர் அங்காடி தொடர்பான அனைத்து நடவடிக்கைகளிலும் தானியம் / சிறுதானியங்களுக்கு “தமிழ்மண்” எனவும் காய்கறிகள் மற்றும் பழங்களுக்கு “தமிழ்வளம்” எனவும் மற்றும் உணவு எண்ணெய்களுக்கு “தமிழ்மணம்” எனவும் பொது முத்திரையாக பதிவு செய்யப்பட்டுள்ளது என்றும் தெரிவித்துள்ளார்.

6. தலைமைச் செயல் அலுவலர், தமிழ்நாடு மாநில வேளாண்மை விற்பனை வாரியம் அவர்கள், இத்திட்டத்தினைச் சிறப்பாக செயல்படுத்தும் பொருட்டு கீழ்க்காணும் அலுவலர்களைக் கொண்டு மாநில அளவிலான குழு ஒன்று அமைக்கப்பட்டுள்ளது என்று தெரிவித்துள்ளார்:

| | | |
|---|---|---|
| 1 | தலைமைச் செயல் அலுவலர், தமிழ்நாடு மாநில வேளாண்மை விற்பனை வாரியம் | தலைவர் |
| 2 | வேளாண்மைக் கூடுதல் இயக்குநர், (வே.வ) | உறுப்பினர் செயலாளர் |
| 3 | வேளாண்மை இணை இயக்குநர், (ஒ.கூ) | உறுப்பினர் |
| 4 | உதவிச் செயலாளர், தமிழ்நாடு மாநில வேளாண்மை விற்பனை வாரியம் | உறுப்பினர் |
| 5 | நிதித் துறையிலிருந்து ஒரு பிரதிநிதி | உறுப்பினர் |

(த.பி.பா)

| | | |
|---|---|---|
| 6 | வேளாண்மைத் துறையிலிருந்து ஒரு பிரதிநிதி | உறுப்பினர் |
| 7 | தோட்டக்கலை மற்றும் மலைப்பயிர்கள் துறையிலிருந்து ஒரு பிரதிநிதி | உறுப்பினர் |

இக்குழுவானது தேவைப்படும் போது ஒன்றாகக்கூடி உழவர் அங்காடிகளின் அனைத்து நடவடிக்கைகளையும் கண்காணித்து வழிநடத்தும். குழுவில் எடுக்கப்படும் தீர்மானங்களும் முடிவுகளும் இறுதியானதாக இருக்கும்.

7. தலைமைச் செயல் அலுவலர், தமிழ்நாடு மாநில வேளாண்மை விற்பனை வாரியம் அவர்கள், உழவர் அங்காடிகள் அமைக்கத் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ள இடங்கள் தொடர்பாக பின்வருமாறு தெரிவித்துள்ளார்:

முதற்கட்டமாக தொடங்கப்படவுள்ள 25 உழவர் அங்காடிகளில் (5 நடமாடும் உழவர் அங்காடிகள் உட்பட), 10 உழவர் அங்காடிகள், வேளாண்மை விற்பனை மற்றும் வேளாண் வணிகத்துறையின் மூலமும், 10 உழவர் அங்காடிகள் தோட்டக்கலை மற்றும் மலைப்பயிர்கள் துறையின் மூலமும் நடத்தப்படும். ஏற்கனவே உள்ள நடமாடும் தக்காளி கூழ் உற்பத்தி அலகுடன் கூடிய 5 வாகனங்களை வேளாண் பொறியியல் துறை மூலம் நடமாடும் உழவர் அங்காடியாக மாற்றம் செய்து தமிழ்நாடு மாநில வேளாண்மை விற்பனை வாரியத்திடம் ஒப்படைக்கப்பட்டவுடன் அவை 5 நடமாடும் உழவர் அங்காடிகளாக செயல்படுத்தப்படும்.

**வேளாண்மை விற்பனை மற்றும் வேளாண் வணிகத்துறையினால் முன்மொழியப்பட்டுள்ள இடங்கள்:**

வேளாண்மை விற்பனை மற்றும் வேளாண் வணிகத்துறைக்கு ஒதுக்கப்பட்ட 10 உழவர் அங்காடிகளில் (300 சதுரஅடி) ஏற்கனவே இத்துறையால் சிறப்பு அங்காடிகள் என்ற பெயரில் கட்டப்பட்ட ஏழு கடைகள் உழவர் அங்காடிகள் அமைப்பதற்காக அடையாளம் காணப்பட்டுள்ளன.

| | | |
|---|---|---|
| 1. | வேளாண் தொழில்நுட்ப பசுமைப் பூங்கா, கிண்டி | 2 எண்கள் |
| 2. | பல்லாவரம் | 1 எண் |
| 3. | நங்கநல்லூர் | 1 எண் |
| 4. | மேடவாக்கம் | 1 எண் |
| 5. | அம்பத்தூர் | 1 எண் |
| 6. | ஆவடி | 1 எண் |

மீதமுள்ள உழவர் அங்காடிகள் அமைப்பதற்காக பெருநகர சென்னை மாநகராட்சியின் கட்டுபாட்டிலுள்ள இடங்களில் கடைகள் அமைக்க கீழ்க்காணும் இடங்கள் தேர்வு செய்யப்பட்டுள்ளன.

1. கந்தன் சாவடி, அண்ணா நெடுஞ்சாலை வணிக வளாகம்.
2. சோழிங்கநல்லூர் சந்திப்பு அருகில், ஆவின் காம்பளக்ஸ் எதிரில் (30x30 ச.அ)
3. பள்ளிக்கரணை வணிக வளாகத்திற்கு முன்புறம் உள்ள நிலம் (30x30 ச.அ)

கிருஷ்ணகிரி, தருமபுரி, கோவை, சேலம் மற்றும் திருப்பூர் ஆகிய 5 மாவட்டங்களில் உள்ள தக்காளிக் கூழ் தயாரிக்கும் அலகுடன் கூடிய 5 வாகனங்கள் நடமாடும் உழவர் அங்காடிகளாக வேளாண் பொறியியல் துறை மூலம் மாற்றப்பட்டு தமிழ்நாடு மாநில வேளாண்மை விற்பனை வாரியத்திடம் ஒப்படைக்கப்பட்டு அவை நடமாடும் உழவர் அங்காடிகளாக இயக்கப்படும்.

**தோட்டக்கலை மற்றும் மலைப்பயிர்கள் துறையால் முன்மொழியப்பட்ட இடம்:**

1. சிஐடி காலனி, தமிழ்நாடு வீட்டு வசதி வாரியத்தின் கட்டுப்பாட்டிலுள்ள வாடகைக் கடை
2. பிவிஆர் சாலை, கே. கே. நகர், தமிழ்நாடு வீட்டு வசதி வாரியத்தின் கட்டுப்பாட்டிலுள்ள வாடகைக் கடை
3. எஸ். வி. லிங்கம் சாலை, கே. கே. நகர், தமிழ்நாடு வீட்டு வசதி வாரியத்தின் கட்டுப்பாட்டிலுள்ள வாடகைக் கடை
4. சாஸ்திரி நகர், பெசன்ட் நகர், தமிழ்நாடு வீட்டு வசதி வாரியத்தின் கட்டுப்பாட்டிலுள்ள வாடகைக் கடை
5. அண்ணா நகர், திருமங்கலம், தமிழ்நாடு வீட்டு வசதி வாரியத்தின் கட்டுப்பாட்டிலுள்ள வாடகைக் கடை
6. திருவான்மியூர், தமிழ்நாடு தோட்டக்கலை மேம்பாட்டு முகமையின் கட்டுப்பாட்டிலுள்ள கடை
7. மாதவரம் பண்ணை, தமிழ்நாடு தோட்டக்கலை மேம்பாட்டு முகமையின் கட்டுப்பாட்டிலுள்ள கடை
8. ரிப்பன் மாளிகை, பெருநகர சென்னை மாநகராட்சி வளாகத்திலுள்ள கடை
9. செம்மொழிப் பூங்கா
10. செங்காந்தழ் பூங்கா

(த.பி.பா)

8. தலைமைச் செயல் அலுவலர், தமிழ்நாடு மாநில வேளாண்மை விற்பனை வாரியம் அவர்கள், கீழே விவரிக்கப்பட்டுள்ளபடி ரூ.302.1587 இலட்சம் மதிப்பில் தமிழ்நாடு மாநில வேளாண்மை விற்பனை வாரியத்தின் நிதியினைப் பயன்படுத்தி பின்வரும் பணிகள் மேற்கொள்ளப்பட்டன என்றும் மேற்கொள்ளப்பட்ட பணிகளுக்கு பின்னேற்பு வழங்குமாறும் கேட்டுக்கொண்டுள்ளார்:

1. பொருட்களுக்கான அச்சிடப்பட்ட பைகள் மற்றும் சிலிண்டர்கள் வாங்கியமைக்கான செலவுத் தொகை ரூ.64.03 இலட்சம்

| Sl. No | Name of work | Amount Rs. In Lakh |
|---|---|---|
| 1 | Supply of **printing cylinders** for 20 variants of Rice, Millets, Dal, Jaggery, Dry chilli for the purpose of printing pouches | 23.21 |
| 2 | Supply of additional printing cylinders for 15 variants out of 20 variants including Rice, Millet & Dal for the purpose of printing pouches. | 7.35 |
| 3. | Supply of three layers of printed pouches with window made up of high quality polymer material with multi-colour printing for **Traditional rice** varieties. | 13.39 |
| 4 | Supply of three layers of printed pouches with window made up of high quality polymer material with multi-colour printing for **Millets** varieties. | 10.04 |
| 5 | Supply of three layers of printed pouches with window made up of high quality polymer material with multi-colour printing for **Pulses, Country sugar, Dry chilli.** | 10.04 |
| | **Total** | **64.03** |

2. அனைத்து அங்காடிகளுக்கும் புதிய ரேக் பொருத்துதல், குளிரூட்டி அமைத்தல், சோழிங்கநல்லூர் மற்றும் பள்ளிக்கரணையில் புதிய இடங்களில் கட்டுமானப் பணி மேற்கொள்ளுதல் ஆகியவற்றிக்கான செலவினத் தொகை ரூ.38.56 இலட்சம்.

| S. No | Name of Work | Amount Rs. In Lakh |
|---|---|---|
| 1 | Providing Basement level Construction and Uzhavar Angadi Rack arrangement to Sholinganallur Uzhavar Angadi in Chennai | 5.95 |

| | | |
|---|---|---|
| 2 | Providing Basement level Construction and Uzhavar Angadi Rack arrangement to Pallikaranai Uzhavar Angadi in Chennai | 5.95 |
| 3 | Providing Uzhavar Angadi Air Conditioner and Rack arrangement for Pallavaram Uzhavar Angadi in Chennai | 4.15 |
| 4 | Providing Uzhavar Angadi Rack arrangement for Medavakkam Uzhavar Angadi in Chennai | 3.53 |
| 5 | Providing Uzhavar Angadi Rack arrangement for Nanganallur Uzhavar Angadi in Chennai | 3.24 |
| 6 | Providing Uzhavar Angadi Rack arrangement for Avadi Uzhavar Angadi in Chennai | 3.48 |
| 7 | Providing Uzhavar Angadi Rack arrangement for Ambattur Uzhavar Angadi in Chennai | 3.40 |
| 8 | Providing Uzhavar Angadi Rack arrangement for Guindy Uzhavar Angadi in Chennai | 4.47 |
| 9 | Providing Uzhavar Angadi Rack arrangement for Kandanchavadi Uzhavar Angadi in Chennai | 4.39 |
| | **Total** | **38.56** |

3. அட்டைப்பெட்டிகள் மற்றும் அட்டைப்பெட்டி ஒட்டும் இயந்திரம் வாங்குவதற்கான செலவினத்தொகை ரூ.10.82 இலட்சம்.

| **Sl. No** | **Name of work** | **Amount Rs. In Lakh** |
|---|---|---|
| 1 | Supply, installation and commissioning of **Carton tapping machine** and hand pallet truck to the packing site of Agro Tech Green Park, Guindy, Chennai – 32. | 5.66 |
| 2 | Supply of **Carton boxes** to the packing site of Agro Tech Green Park, Guindy, Chennai – 32. | 5.16 |
| | **Total** | **10.82** |

(த.பி.பா)

4. கிண்டி அக்ரோ பசுமைப் பூங்காவின் தரைத் தளத்தில் சிப்பம் கட்டும் இயந்திரம் பொருத்துவதற்காக தரைத்தளம் அமைப்பு, முடிக்கப்பட்ட பொருட்கள் சேமிப்பு போன்றவற்றிற்கான எல்லை நிர்ணயம் செய்தமைக்கான செலவினத்தொகை ரூ.36.01 இலட்சம் .

| Sl. No | Name of work | Amount Rs. In Lakh |
|---|---|---|
| 1. | Providing Packaging machinery EB cabling from the source, panel board, compressor bed & shed, pallets for 20 variants for keeping raw products & finished products, partition work for storage of finished products, Vibrating pad arrangements & hand holding of packaging works at Ground Floor of Agro Tech Green Park, Guindy, Chennai – 32. | 36.01 |

5. 2024-25 ஆம் ஆண்டிற்கான பொதுப்பணித் திட்ட அட்டவணையின் அடிப்படையில் 10 உழவர் அங்காடிகளின் புதிய கட்டுமானத்திற்கான செலவினத் தொகை ரூ.65.81 இலட்சம்.

| Sl.No | Name of work | Amount Rs. In Lakh |
|---|---|---|
| 1. | Providing ALCO Panel and LED back – LIT name board for the Uzhavar Angadi at Agro Tech Green Park | 8.55 |
| 2. | Providing ALCO Panel and LED back – LIT name board for the Uzhavar Angadi at Pallavaram, Chennai | 4.60 |
| 3. | Providing ALCO Panel and LED back – LIT name board for the Uzhavar Angadi at Nanganallur, Chennai | 4.60 |
| 4. | Providing ALCO Panel and LED back – LIT name board for the Uzhavar Angadi at Medavakkam, Chennai. | 4.60 |
| 5. | Providing ALCO Panel and LED back – LIT name board for the Uzhavar Angadi at Ambathur, Chennai. | 4.60 |
| 6. | Providing ALCO Panel and LED back – LIT name board for the Uzhavar Angadi at Avadi, Chennai. | 4.60 |

| | | |
|---|---|---|
| 7. | Providing ALCO Panel and LED back – LIT name board for the Uzhavar Angadi at Kandanchavadi in Cehnnai District. | 8.55 |
| 8. | Establishment of New Uzhavar Angadi at Sholinganallur (GCC) (Opposite to Aavin) in Chengalpattu District. | 9.98 |
| 9. | Establishment of New Uzhavar Angadi at Pallikaranai (GCC) in Chennai District | 9.98 |
| 10. | Establishment of Packaging centre for Uzhavar Angadi's at Agro Tech Green Park, Guindy, Chennai - 32. | 5.75 |
| | **Total** | **65.81** |

6. உழவர் அங்காடிகளுக்கான பொருட்கள் மற்றும் பிற பொருட்களை வாங்குவதற்கான செலவு ரூ.53.271 இலட்சம்.

| **Sl.No** | **Particulars** | **Qty Procured (in MT)** | **Amount (Rs. In lakh)** |
|---|---|---|---|
| 1 | 20 commodities (Traditional rice varieties, Pulses, Country sugar, Chilli) including zip lock cover, quality testing fee, name board printing, bottles, trolley, carton box and etc.,) | 38.5 | 53.271 |

7. கணினி மற்றும் மென்பொருள் வாங்குவதற்கான செலவினம் ரூ.7.3861 இலட்சம்.

| **Sl.No** | **Particulars** | **Amount (Rs in lakh)** |
|---|---|---|
| 1 | 10 Computer, bill software | 7.3861 |

8. கந்தன்சாவடி இருப்பிடத்திற்காக பெருநகர சென்னை மாநகராட்சிக்கு செலுத்தப்பட்ட வாடகைக் கட்டணத்தின் முன்பணத் தொகைக்கான செலவு ரூ.0.318 இலட்சம்.
9. இலட்சினை(Logo), வர்த்தக முத்திரை(Trade mark) மற்றும் தரத்தின் பெயர்(Brand name), பதிவுக்கான செலவுகள் ரூ.1.2036 இலட்சம்.
10. சிப்பம் கட்டும் இயந்திரம் வாங்குவதற்கான செலவு ரூ.24.75 இலட்சம்.

(த.பி.பா)

பின்னேற்பாணை கோருவதற்கான சுருக்கம்:

| வ. எண் | விவரம் | செலவினத் தொகை ரூ. இலட்சத்தில் |
|---|---|---|
| 1. | பொருட்களுக்கான அச்சிடப்பட்ட பைகள் மற்றும் சிலிண்டர்கள் வாங்கியது | 64.03 |
| 2. | அனைத்து அங்காடிகளுக்கும் புதிய ரேக் பொருத்துதல், குளிரூட்டி அமைத்தல், சோழிங்கநல்லூர் மற்றும் பள்ளிக்கரணையில் புதிய இடங்களில் கட்டுமானப் பணி மேற்கொள்ளுதல் ஆகியவற்றிக்கான செலவினம் | 38.56 |
| 3 | அட்டைப்பெட்டிகள் மற்றும் அட்டைப்பெட்டி ஒட்டும் இயந்திரம் வாங்குவதற்கான செலவினம் | 10.82 |
| 4. | கிண்டி அக்ரோ பசுமை பூங்காவின் தரைத் தளத்தில் சிப்பம் கட்டும் இயந்திரம் பொருத்துவதற்காக தரைத்தளம் அமைப்பு, முடிக்கப்பட்ட பொருட்கள் சேமிப்பு போன்றவற்றிற்கான எல்லை நிர்ணயம் செய்தமைக்கான செலவினம் | 36.01 |
| 5. | 2024-25 ஆம் ஆண்டிற்கான பொதுப்பணித் திட்ட அட்டவணையின் அடிப்படையில் 10 உழவர் அங்காடிகளின் புதிய கட்டுமானத்திற்கான செலவினத் தொகை | 65.81 |
| 6. | உழவர் அங்காடிக்கு தேவையான சிறுதானியம் மற்றும் பாரம்பரிய அரிசி வகைகள் வாங்கியது | 53.271 |
| 7. | கணினி மற்றும் மென்பொருள் வாங்கியது | 7.3861 |
| 8. | கந்தன்சாவடி இருப்பிடத்திற்காக பெருநகர சென்னை மாநகராட்சிக்கு செலுத்தப்பட்ட வாடகைக் கட்டணத்திற்கு முன்பணம் செலுத்தியது | 0.318 |
| 9. | இலட்சினை(Logo), வர்த்தக முத்திரை(Trade mark) மற்றும் பிராண்ட் பெயர், பதிவுக்கான செலவினம் | 1.2036 |
| 10. | சிப்பம் கட்டும் இயந்திரம் வாங்கியது | 24.75 |
| | மொத்தம் | 302.1587 |

வரிசை எண்.1 முதல் 10 வரை தெரிவிக்கப்பட்டுள்ள பணிகளின் பட்டியலில், தொடர் செலவினங்களான வரிசை எண் 6 மற்றும் 8 தவிர்த்து இதர பட்டியல்கள் தொடராச் செலவினத்திற்காக ரூ.248.5697 இலட்சம் செலவினம் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

9. தலைமைச் செயல் அலுவலர், தமிழ்நாடு மாநில வேளாண்மை விற்பனை வாரியம் அவர்கள், மேலே பத்தி 8 இல் குறிப்பிட்டவாறு, தொடராச் செலவினமாக செலவழிக்கப்பட்ட ரூ.248.5697 இலட்சத்தினை, தமிழ்நாடு மாநில வேளாண்மை விற்பனை வாரியத்தின் சுமூகமான செயல்பாட்டிற்கு போதுமான நிதியினைத் தக்கவைக்கும் பொருட்டு, மீள வாரியக் கணக்கில் செலுத்துவதற்காக, மேற்காண் தொகையான ரூ.248.5697 இலட்சத்தினை மாநில நிதியிலிருந்து வழங்குமாறும், மேலே பத்தி 8 இல் குறிப்பிட்டுள்ளவாறு, ரூ.302.1587 இலட்சம் செலவில் மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகள் மற்றும் செலவினங்களை அங்கீகரித்து பின்னேற்பு வழங்குமாறும் அரசினைக் கேட்டுக்கொண்டுள்ளார்.

10. தலைமைச் செயல் அலுவலர், தமிழ்நாடு மாநில வேளாண்மை விற்பனை வாரியம் அவர்கள், மேற்காணும் செலவினங்கள் மட்டுமின்றி, ரூ.252.725 இலட்சத்திற்கு பின்வரும் செலவினங்களுக்கு மாநில நிதியிலிருந்து ஒதுக்கீடு செய்து ஆணை வழங்குமாறு அரசினைக் கோரியுள்ளார்:

**அட்டவணை-1: தமிழ்நாடு மாநில வேளாண்மை விற்பனை வாரியத்தின் மூலம் முன்மொழியப்பட்டுள்ள பணிகளின் மதிப்பீட்டுத் தொகை ரூ. 107.075 இலட்சம்.**

| வ. எண் | விவரம் | அலகு | கோரும் தொகை (இலட்சம்) |
|---|---|---|---|
| 1 | தக்காளிக் கூழ் வாகனத்தை நடமாடும் உழவர் அங்காடி வாகனமாக மாற்றுதல் (5 எண்கள்) | 17.50 இலட்சம் | 87.50 |
| 2 | 5 கணினி, 15 வெப்ப அச்சுப்பொறி மற்றும் 15 பார்கோடு ஸ்கேனர் | | 5.575 |

(த.பி.பா)

| | | | |
|---|---|---|---|
| 3 | பெருநகர சென்னை மாநகராட்சிக்கு சொந்தமான கடைகள் மற்றும் நிலங்களுக்கான வாடகைக் கட்டணம் | | 4.00 |
| 4 | விளம்பரம் மற்றும் இதர செலவினங்கள் | | 10.00 |
| | | மொத்தம் (i) | 107.075 |

தக்காளிக் கூழ் வாகனங்களை நடமாடும் உழவர் அங்காடிகளாக வேளாண் பொறியியல் துறை மூலம் ரூ.87.5 இலட்சம் செலவில் மாற்றப்பட்டுள்ளது. அதற்கான பட்டியல், தீர்வு செய்யப்படாமல் நிலுவையில் உள்ளது.

**அட்டவணை-2: தோட்டக்கலை மற்றும் மலைப்பயிர்கள் துறையின் மூலம் மேற்கொள்ளப்படும் பணிகளுக்கான செலவினத் தொகை ரூ.145.65 இலட்சம்.**

| வ. எண் | தேர்வு செய்யப்பட்ட இடங்கள் | பரப்பு (ச.அ) | வாடகை (ரூ./ மாதம்) | கட்டுமானப் பணிகள் மற்றும் உள் வேலைப்பாடுகள் செலவினத் தொகை (ரூ.இலட்சத்தில்) |
|---|---|---|---|---|
| 1. | கடை எண்: 1, சிஜடி காலனி ஃபோர்ஷோர் எஸ்டேட் | 210 | 4,410 | 10.65 |
| 2. | கடை எண்: 2, பிவிஆர் சாலை, கே.கே. நகர் | 153 | 16,830 | 11.00 |
| 3. | கடை எண்:10, எஸ். வி. லிங்கம் சாலை, கே. கே. நகர் | 158 | 17,064 | 8.50 |
| 4. | கடை எண்:4, சாஸ்திரி நகர், பெசன்ட் நகர் | 900 | 90,000 | 17.00 |
| 5. | கடை எண்:12, அண்ணா நகர், திருமங்கலம் | 256 | 24,832 | 13.20 |
| 6. | டான்ஹோடா கடைகள் வளாகம், திருவான்மியூர் | | - | 18.50 |

| | | | | |
|---|---|---|---|---|
| 7. | மாதவரம் பண்ணை | | - | 21.95 |
| 8. | ரிப்பன் மாளிகை | | - | 21.60 |
| 9. | செம்மொழிப் பூங்கா | | - | 8.15 |
| 10. | செங்காந்தழ் பூங்கா | | - | 15.10 |
| | **மொத்தம்(ii)** | | | **145.65** |
| | **ஆக மொத்தம் (i) +(ii)** | | | **252.725** |

11. தலைமைச் செயல் அலுவலர், தமிழ்நாடு மாநில வேளாண்மை விற்பனை வாரியம் அவர்கள், இத்திட்டத்திற்கான செயலாக்க வழிமுறைகளை (Implementation Guidelines) பின்வருமாறு தெரிவித்துள்ளார்:

- உழவர் அங்காடி மற்றும் நடமாடும் உழவர் அங்காடிகளை விவசாயிகள் / வேளாண் தொழில்முனைவோர்கள் / வேளாண் பட்டதாரிகள் / வேளாண்மையில் ஈடுபட்டுள்ள இளைஞர்கள் / உழவர் உற்பத்தியாளர் நிறுவனங்களுக்கு குத்தகை அடிப்படையில் ஒப்படைக்கப்படும்.
- உழவர் அங்காடிக்கு தேவையான பொருட்களை விவசாயிகள் / வேளாண் தொழில்முனைவோர்கள் / உழவர் உற்பத்தியாளர் நிறுவனங்களிடமிருந்து நேரடியாகக் கொள்முதல் செய்ய வேண்டும்.
- வேளாண் விளைபொருட்கள் மற்றும் மதிப்புக்கூட்டப்பட்ட பொருட்களை மட்டும் விற்பனை செய்ய அனுமதிக்கப்படும்.
- தமிழ்நாடு மாநில வேளாண்மை விற்பனை வாரியத்தின் தலைமை அலுவலகத்தின் தரைத்தளத்திலுள்ள சிப்பம் கட்டும் இயந்திரங்கள் மற்றும் இதர இயந்திரங்கள் / தளவாடங்கள் குத்தகைக்கு விடப்படும்.
- விவசாயிகள் / வேளாண் தொழில்முனைவோர் / வேளாண் பட்டதாரிகள் / வேளாண்மையில் ஈடுபட்டுள்ள இளைஞர்கள் மற்றும் உழவர் உற்பத்தியாளர் நிறுவனங்கள் உழவர் அங்காடிகளை செயல்படுத்துதல் மற்றும் பராமரித்தலை மேற்கொள்ள வேண்டும்.
- தர நிர்ணயத்தினை மாவட்ட அளவிலுள்ள அக்மார்க் ஆய்வுக்கூடத்தின் மூலம் உறுதி செய்ய வேண்டும்.
- உழவர் அங்காடிகளின் செயல்பாடுகளை மாநில அளவிலான குழு கண்காணிக்கும்.

(த.பி.பா)

12. தலைமைச் செயல் அலுவலர், தமிழ்நாடு மாநில வேளாண்மை விற்பனை வாரியம் அவர்கள், இத்திட்டத்தினைச் செயல்படுத்த கீழ்க்காணும் ஆணைகளை வழங்குமாறு அரசினைக் கேட்டுக்கொண்டுள்ளார்:

- தமிழ்நாடு மாநில வேளாண்மை விற்பனை வாரியம், தோட்டக்கலை மற்றும் மலைப்பயிர்கள் துறையின் மூலம் 5 நடமாடும் உழவர் அங்காடி உட்பட 25 உழவர் அங்காடிகளை கீழ்க்கண்டவாறு மொத்த நிதித் தொகை ரூ.554.8837 இலட்சத்தில் செயல்படுத்துவதற்கு அனுமதி.

| வ. எண் | விவரம் | தொகை (ரூ.இலட்சத்தில்) |
|---|---|---|
| 1 | மாநில நிதியின் கீழ் கோரப்படும் தொகை | |
| அ) | பின்னேற்பு மற்றும் மீள வழங்கப்பட வேண்டிய தொகை | 248.5697 |
| ஆ) | கோரப்படும் நிதி (த.மா.வே.வி.வாரியம்- ரூ.107.075 இலட்சம் + தோ.க(ம) ம.ப துறை -ரூ.145.65 இலட்சம்) | 252.7250 |
| 2 | நிகர மொத்தம் (1அ+1ஆ) | 501.2947 |
| 3 | த.மா.வே.வி.வாரியத்தின் நிதியில் செலவினம் மேற்கொண்டதற்கு பின்னேற்பு கோருதல் | 53.589 |
| | மொத்தக் கூடுதல் (1+2) | **554.8837** |

மொத்த பின்னேற்பு கோரும் செலவினத்தொகை ரூ.302.1587 இலட்சம் (1அ+3).

- தமிழ்நாடு மாநில வேளாண்மை விற்பனை வாரியத்தின் நிதியிலிருந்து மேலே பத்தி 8 இல் வரிசை எண் 1 முதல் 10 வரையில் உள்ள செயல்பாடுகளுக்கும் மற்றும் மேற்கொள்ளப்பட்ட செலவினத்தொகை ரூ.302.1587 இலட்சத்திற்கு பின்னேற்பாணை.
- மாநில நிதியில் இருந்து ரூ.501.2947 இலட்சம் நிதி ஒதுக்கீடு
- மாநில நிதியில் கோரப்படும் ரூ. 501.2947 இலட்சத்தில், ஆணையர், வேளாண்மை விற்பனை மற்றும் வேளாண் வணிகத்துறை அவர்களுக்கு ரூ.355.6447 இலட்சம் (ரூ.248.5697 இலட்சம் + ரூ.107.075 இலட்சம்) நிதியும், இயக்குநர், தோட்டக்கலை மற்றும் மலைப்பயிர்கள் துறை அவர்களுக்கு ரூ.145.65 இலட்சம் நிதியும் மாநில நிதியின்கீழ் புதிய கணக்குத் தலைப்பில் இந்தத் திட்டத்தைச் செயல்படுத்த அனுமதி

- தமிழ்நாடு மாநில வேளாண்மை விற்பனை வாரியத்தின் சுமூகமான செயல்பாட்டிற்கு போதுமான நிதியினை தக்கவைக்கும் பொருட்டு தொடராச் செலவினமாக மேற்கொள்ளப்பட்ட ரூ.248.5697 இலட்சத்தினை மாநில நிதியிலிருந்து பெற்று மீள வாரியக் கணக்கில் செலுத்த ஆணையர், வேளாண்மை விற்பனை மற்றும் வேளாண் வணிகத்துறை அவர்களுக்கு அதிகாரம் மற்றும் அனுமதி.
- மேலே பத்தி 10 இல் அட்டவணை 1 இல் உள்ள முன்மொழியப்பட்ட செலவினத்திற்காக மாநில நிதியில் கோரப்படும் தொகையான ரூ.107.075 இலட்சத்தை ஆணையர், வேளாண்மை விற்பனை மற்றும் வேளாண் வணிகத்துறை அவர்கள், தலைமைச் செயல் அலுவலர், தமிழ்நாடு மாநில வேளாண்மை விற்பனை வாரியம் அவர்களுக்கு விடுவிப்பதற்கு அங்கீகரித்து அனுமதி.
- தமிழ்நாடு தோட்டக்கலை உற்பத்தியாளர்கள் கூட்டுறவு நிறுவனங்கள் லிமிடெட் (TANHOPE) நிதியிலிருந்து மேலே பத்தி 10 இல், அட்டவணை 2 இல் உள்ள செயல்பாடுகளுக்கும் மற்றும் மேற்கொள்ளப்பட்ட செலவினத்தொகை ரூ.145.65 இலட்சத்திற்கும் பின்னேற்பாணை
- நடமாடும் தக்காளிக் கூழ் இயந்திர வாகனத்தினை நடமாடும் உழவர் அங்காடிகளாக வேளாண்மைப் பொறியியல் துறை மூலம் மாற்றம் செய்தமைக்கான பின்னேற்பாணையும் மாநில நிதியிலிருந்து தலைமைப் பொறியாளர், வேளாண் பொறியியல் துறை அவர்களுக்கு பட்டியலினைத் தீர்வு செய்திடவும் அனுமதி
- தமிழ்நாடு மாநில வேளாண்மை விற்பனை வாரிய பொறியியல் பிரிவின் மூலம் மேற்கொள்ளப்பட்ட கட்டுமானப் பணிகள் மற்றும் இயந்திரங்கள் பொருத்தப்பட்டதற்கு பின்னேற்பு ஆணை
- உழவர் அங்காடிக்காக மேற்கொள்ளப்பட உள்ள தொடர் செலவினங்களுக்கானத் தொகையினை வாரியம் மற்றும் விற்பனைக்குழு நிதியின் மூலம் மேற்கொள்ளவும் பின்னர் தமிழ்நாடு மாநில வேளாண்மை விற்பனை வாரியக் கூட்டத்தில் பின்னேற்பு பெறவும் அனுமதி

(த.பி.பா)

- தலைமைச் செயல் அலுவலர், தமிழ்நாடு மாநில வேளாண்மை விற்பனை வாரியம் அவர்கள் தலைமையில் அமைக்கப்பட்டுள்ள மாநில அளவிலான குழுவிற்கு ஒப்புதல்
- தலைமைச் செயல் அலுவலர், தமிழ்நாடு மாநில வேளாண்மை விற்பனை வாரியம் அவர்கள் மற்றும் இயக்குநர், தோட்டக்கலை மற்றும் மலைப்பயிர்கள் துறை அவர்கள் தேவைக்கேற்ப உழவர் அங்காடியின் அமைவிடத்தினை மாற்றிக்கொள்ள அனுமதி
- தமிழ்நாடு மாநில வேளாண்மை விற்பனை வாரிய செயற்பொறியாளர் அவர்கள் மற்றும் இயக்குநர், தோட்டக்கலை மற்றும் மலைப்பயிர்கள் துறை அவர்கள் உழவர் அங்காடியினை வாடகைக்கு விடவும், கட்டுமானப் பணிகள் மற்றும் உள் வேலைப்பாடுகளை மேற்கொள்ளவும் அனுமதி மற்றும்
- தலைமைச் செயல் அலுவலர், தமிழ்நாடு மாநில வேளாண்மை விற்பனை வாரியம் மற்றும் இயக்குநர், தோட்டக்கலை மற்றும் மலைப்பயிர்கள் துறை அவர்கள் உழவர் அங்காடிகள் மற்றும் இயந்திரங்களை ஒப்பந்த முறையில் குத்தகைக்கு வழங்கிட அனுமதி.

13. மேலே பத்தி 12 இல் உள்ள தலைமைச் செயல் அலுவலர், தமிழ்நாடு மாநில வேளாண்மை விற்பனை வாரியம் அவர்களின் கருத்துருவினை கவனமுடன் ஆராய்ந்து, அதனை ஏற்று, கீழ்க்காணும் ஆணைகளை வழங்கி அரசு ஆணையிடுகிறது:

- 5 நடமாடும் உழவர் அங்காடி உட்பட 15 உழவர் அங்காடிகளை தமிழ்நாடு மாநில வேளாண்மை விற்பனை வாரியம் மூலமும், 10 உழவர் அங்காடிகளை தோட்டக்கலை மற்றும் மலைப்பயிர்கள் துறையின் மூலமும், ஆக மொத்தம் 25 உழவர் அங்காடிகளை மேலே பத்தி 11 இல் குறிப்பிடப்பட்டுள்ள வழிகாட்டு நெறிமுறைகளைப் பின்பற்றி செயல்படுத்துவதற்கு அனுமதி அளிக்கப்படுகிறது.
- கீழ்க்காணும் பணிகளை மேற்கொள்வதற்கு ரூ.97.50 இலட்சம் மாநில நிதியிலிருந்து ஒப்பளிப்பு செய்தும், அத்தொகையினை தலைமைச் செயல் அலுவலர், தமிழ்நாடு மாநில வேளாண்மை

விற்பனை வாரியம் அவர்களுக்கு வழங்கிட, ஆணையர், வேளாண்மை விற்பனை மற்றும் வேளாண் வணிகத்துறை அவர்களுக்கு அனுமதி வழங்கப்படுகிறது:

| வ. எண் | விவரம் | அலகு | தொகை (இலட்சம்) |
|---|---|---|---|
| 1 | தக்காளிக் கூழ் வாகனத்தை நடமாடும் உழவர் அங்காடி வாகனமாக மாற்றுதல் (5 எண்கள்) | 17.50 இலட்சம் | 87.50 |
| 2 | விளம்பரம் மற்றும் இதர செலவினங்கள் | | 10.00 |
| | | மொத்தம்) | 97.50 |

- தமிழ்நாடு மாநில வேளாண்மை விற்பனை வாரியத்தின் நிதியிலிருந்து மேலே பத்தி 8 இல் வரிசை எண் 1 முதல் 10 வரையில் உள்ள செயல்பாடுகளுக்கும் மற்றும் மேற்கொள்ளப்பட்ட செலவினத்தொகை ரூ.302.1587 இலட்சத்திற்கு பின்னேற்பாணை வழங்கப்படுகிறது.
- தமிழ்நாடு தோட்டக்கலை உற்பத்தியாளர்கள் கூட்டுறவு நிறுவனங்கள் லிமிடெட் (TANHOPE) நிதியிலிருந்து மேலே பத்தி 10 இல், அட்டவணை 2 இல் உள்ள செயல்பாடுகளுக்கும் மற்றும் மேற்கொள்ளப்பட்ட செலவினத்தொகை ரூ.145.65 இலட்சத்திற்கும் பின்னேற்பாணை வழங்கப்படுகிறது.
- நடமாடும் தக்காளிக் கூழ் இயந்திர வாகனத்தினை நடமாடும் உழவர் அங்காடிகளாக வேளாண்மைப் பொறியியல் துறை மூலம் மாற்றம் செய்தமைக்கான பின்னேற்பாணையும் மாநில நிதியிலிருந்து தலைமைப் பொறியாளர், வேளாண் பொறியியல் துறை அவர்களுக்கு பட்டியலினை தீர்வு செய்திடவும் அனுமதி வழங்கப்படுகிறது.
- உழவர் அங்காடிக்காக மேற்கொள்ளப்பட உள்ள தொடர் செலவினங்களுக்கானத் தொகையினை வாரியம் மற்றும் விற்பனைக்குழு நிதியின் மூலம் மேற்கொள்ளவும் பின்னர் தமிழ்நாடு மாநில வேளாண்மை விற்பனை வாரியக் கூட்டத்தில் பின்னேற்பு பெறவும் அனுமதி வழங்கப்படுகிறது.

(த.பி.பா)

- தலைமைச் செயல் அலுவலர், தமிழ்நாடு மாநில வேளாண்மை விற்பனை வாரியம் அவர்கள் தலைமையில் அமைக்கப்பட்டுள்ள மாநில அளவிலான குழுவிற்கு ஒப்புதல் வழங்கப்படுகிறது.
- தலைமைச் செயல் அலுவலர், தமிழ்நாடு மாநில வேளாண்மை விற்பனை வாரியம் அவர்கள் மற்றும் இயக்குநர், தோட்டக்கலை மற்றும் மலைப்பயிர்கள் துறை அவர்கள் தேவைக்கேற்ப உழவர் அங்காடியின் அமைவிடத்தினை மாற்றிக்கொள்ள அனுமதி வழங்கப்படுகிறது.
- தமிழ்நாடு மாநில வேளாண்மை விற்பனை வாரிய செயற்பொறியாளர் அவர்கள் மற்றும் இயக்குநர், தோட்டக்கலை மற்றும் மலைப்பயிர்கள் துறை அவர்கள் உழவர் அங்காடியினை வாடகைக்கு விடவும், கட்டுமானப் பணிகள் மற்றும் உள் வேலைப்பாடுகளை மேற்கொள்ளவும் அனுமதி வழங்கப்படுகிறது.
- தலைமைச் செயல் அலுவலர், தமிழ்நாடு மாநில வேளாண்மை விற்பனை வாரியம் மற்றும் இயக்குநர், தோட்டக்கலை மற்றும் மலைப்பயிர்கள் துறை அவர்கள் உழவர் அங்காடிகள் மற்றும் இயந்திரங்களை ஒப்பந்த முறையில் குத்தகைக்கு வழங்கிட அனுமதி வழங்கப்படுகிறது.

14. மேலே பத்தி 13 ல் ஒப்பளிக்கப்பட்ட ரூ.97.50 இலட்சம் தொகையானது கீழ்க்காணும் கணக்குத் தலைப்பில் பற்று வைக்கப்பட வேண்டும்:

"2435 ஏனைய வேளாண்மைத் திட்டங்கள் – 01 விற்பனை தரக்கட்டுப்பாடு – 101 விற்பனை வசதிகள் – மாநிலச் செலவினங்கள் – AN வேளாண் வணிக மேம்பாட்டு செயல்பாடுகள் – 309 உதவித் தொகை – 03 குறிப்பிட்ட திட்டங்களுக்கான உதவித் தொகை"

(IFHRMS DPC:2435 01 101 AN 30903)

15. மேலே பத்தி 13-ல் ஒப்பளிக்கப்பட்ட செலவினம் "புதுப் பணி" குறித்த செலவினமாகும். இதற்கு சட்டமன்றப் பேரவையின் ஒப்புதல் பின்னர் பெறப்படும். மேற்குறித்த ஒப்புதலை எதிர்நோக்கி இச்செலவினம் முதற்கண் எதிர்பாராச் செலவு நிதியிலிருந்து முன்பணம் பெறுவதன் மூலம்

மேற்கொள்ளப்படும். முன்பணத்தை அனுமதிக்கின்ற ஆணைகள், நிதித் (வ.செ.பொது.1) துறையில் தனியாக பிறப்பிக்கப்படும். அடுத்து வரும் துணை மானியக் கோரிக்கையில் இச்செலவினம் சேர்க்கப்பட்டு சட்டமன்றப் பேரவையின் ஒப்புதல் பெறும் வரையில் நடப்பாண்டிற்கு தேவைப்படும் செலவினத்தை சரியாக கணக்கிட்டு, எதிர்பாரா செலவின நிதியிலிருந்து முன்பணம் பெறத் தேவையான விண்ணப்பத்தை எதிர்பாரா செலவின நிதி விதிகள் 1963-ல் உள்ள அட்டவணை "A" படிவத்துடன் இவ்வரசாணையின் நகலுடன் இணைத்து நிதி (வ.செ.பொது.1)த் துறைக்கு நேரடியாக அனுப்பி வைக்குமாறு ஆணையர், வேளாண்மை விற்பனை மற்றும் வேளாண் வணிகம், அவர்கள் கேட்டுக் கொள்ளப்படுகிறார். மேலும், இக்கூடுதல் செலவினத்திற்கான உரிய கருத்துருவை 2025-2026 ஆம் ஆண்டிற்கான துணை மதிப்பீடுகளில் சேர்ப்பதற்கு தவறாது உரிய நேரத்தில் நிதித் (வே-உ.ந/வ.செ.பொது.1) துறைக்கு அனுப்பிவைக்குமாறு ஆணையர், வேளாண்மை விற்பனை மற்றும் வேளாண் வணிகம், அவர்கள் கேட்டுக் கொள்ளப்படுகிறார்.

16. மேலே தோற்றுவிக்கப்பட்ட புதிய கணக்குத் தலைப்பிற்கு வேளாண்மை விற்பனை மற்றும் வேளாண் வணிகத்துறை ஆணையர் அவர்கள் மதிப்பீடு, கணக்கு நேரமைப்பு மற்றும் கட்டுப்பாட்டு அதிகாரியாவார். மேற்படி புதிய கணக்குத் தலைப்பினைத் தங்களது பதிவேடுகளில் துவக்கிக் கொள்ளுமாறு சம்மந்தப்பட்ட சம்பளக்கணக்கு அலுவலர் / கருவூல அலுவலர் அவர்கள் கேட்டுக்கொள்ளப்படுகிறார்.

17. இவ்வரசாணை, நிதித் துறையின் அ.சா.கு எண்7280293/ நிதித் (வேளாண்மை-உழவர் நலன்) துறை, நாள்: 27.05.2025 -இல் பெறப்பட்ட இசைவுடன் வெளியிடப்படுகிறது. இதற்கான கூடுதல் நிதியொதுக்கப் பேரேடு எண்.0233 (இருநூற்று முப்பத்து மூன்று) (IFHRMS ASL No. 2025050233)

**(ஆளுநரின் ஆணைப்படி)**

**வ. தட்சிணாமூர்த்தி**
**வேளாண்மை உற்பத்தி ஆணையர்**
**மற்றும் அரசுச் செயலாளர்**

**பெறுநர்**

ஆணையர், வேளாண்மை விற்பனை மற்றும் வேளாண் வணிகம்,
சென்னை-32.

(த.பி.பா)

தலைமைச் செயல் அலுவலர், தமிழ்நாடு மாநில வேளாண்மை
விற்பனை வாரியம், சென்னை-32.
இயக்குநர், தோட்டக்கலை மற்றும் மலைப்பயிர்கள் துறை, சென்னை – 5.
செயற்பொறியாளர், தமிழ்நாடு மாநில வேளாண்மை விற்பனை வாரியம்,
சென்னை -32.
முதன்மை கணக்காய்வுத் தலைவர், (A&E, / Audit / AAD / G&SSA / E&RSA),
சென்னை-18.
இயக்குநர், உள்ளாட்சி நிதித் தணிக்கை, சென்னை-35.
முதுநிலை செயலர் / செயலர், விற்பனைக்குழு (தொடர்புடையது)
அனைத்து மாவட்ட ஆட்சித் தலைவர்கள்,
மாவட்ட கருவூல அலுவலர் (தொடர்புடையது)

**நகல்**

மாண்புமிகு அமைச்சர் (வேளாண்மை-உழவர் நலன்) அவர்களின்
சிறப்பு நேர்முக உதவியாளர், சென்னை-9
வேளாண்மை உற்பத்தி ஆணையர் மற்றும் அரசுச் செயலாளர் அவர்களின்
தனிச் செயலர், வேளாண்மை-உழவர் நலத்துறை, சென்னை-9.
நிதித் (வேளாண்மை-உழவர் நலன் / வ.செ.பொது -1/ வ.செ.பொது-2) துறை,
சென்னை-9.
வேளாண்மை-உழவர் நலத் (OP.3 / B&P) துறை, சென்னை-9.
இருப்புக்கோப்பு / உதிரி நகல்

**//ஆணைப்படி அனுப்பப்படுகிறது//**

க.பூங்கொடி.
(க.பூங்கொடி)
அரசு சார்புச் செயலாளர்
27/5/25